# புதிய விதிமுறைகள்
# நகர— மற்றும் மாவட்டசபைத் தேர்தல் 2003

KOMMUNAL- OG REGIONALDEPARTEMENTET

## தேர்தல் பற்றிய முக்கிய தகவல்.

- **தேர்தல் தினத்தன்று வாக்களிப்பது எவ்வாறு என்பதுபற்றிய முக்கிய தகவல்**
- **முற்கூட்டி எங்கே வாக்களிக்கலாம் என்பதுபற்றிய புதிய விதிமுறைகள்**
- **வாக்குச் சீட்டுக்களில் எவ்வாறு மாற்றம் செய்வது என்பதுபற்றி புதிய விதிமுறைகள்**

**2003ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 15ம் திகதி திங்கட்கிழமை** அன்று நகராட்சிமன்ற மற்றும் மாவட்டஆட்சிமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. சில நகரசபைகள் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் தேர்தலை நடாத்த உள்ளன. தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் நகராட்சிமன்ற மற்றும் மாவட்டஆட்சிமன்றதில் யார் அல்லது எந்தக் கட்சிகளுக்கு இடம் அளிக்கவேண்டும் என்பதை நீங்களும் சேர்ந்து முடிவுசெய்யலாம்.

வாக்குச் சீட்டுக்களில் மாற்றம் செய்வதற்கு இலகுவான புதிய விதிமுறைகள் இவ்வருடம் தயாரிக்கப்பட்டுள்ளன. இத்தேர்வில் எவரைத் தெரிவுசெய்வது என்ற விடயத்தில் கட்சிகளின் தலையீட்டைக் குறைத்து வாக்காளர்கள் வாக்குச் சீட்டில் செய்யும் மாற்றத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். இதனால் வாக்குச்சீட்டுக்களில் மாற்றம்செய்யக்கூடிய வாய்ப்பை அனேகமானவர்கள் பயன்படுத்துவது முக்கியமாகும்.

## இவ்வருடம் வாக்களிப்பதுபற்றிய புதிய மாற்றங்கள்

தேர்தல் தினத்தன்று எங்கே வாக்களிப்பது என்பதை நகரசபை முடிவுசெய்யும்.

நீங்கள் தெரிவாளர் பட்டியலில் பதியப்பட்டிருக்கும் நகரசபையில் விரும்பிய எந்த வாக்குச்சாவடியிலும் வாக்கிடலாம். முன்னைய தேர்தல்களைப்போல் தேர்தல் பங்கீட்டு அட்டை இவ்வருடம் வாக்களிப்பவர்கள் அனைவரிற்கும் தபாலில் அனுப்பப்படமாட்டாது. இவ் ஏற்பாடு நகரசபைகளிடையே வேறுபடும்.

நகராட்சிமன்ற வாக்குச்சீட்டுக்கள் வெள்ளைநிறத்தையும் மாவட்டஆட்சிமன்ற வாக்குச்சீட்டுக்கள் நீலநிறத்தையும் கொண்டிருக்கும். ஓஸ்லோவில் மாவட்டஆட்சிமன்றத் தேர்தல் இல்லை.

### கீழ்குறிப்பிட்டவாறு செய்யவும்:

1. நகராட்சிமன்ற மற்றும் மாவட்டஆட்சிமன்றத் தேர்தல்களில் நீங்கள் வாக்களிக்க விரும்பும் குழு அல்லது கட்சியின் வாக்குச் சீட்டை எடுத்துக்கொள்ளவும்.
2. தனிநபர்களிற்கு வாக்களிக்க விரும்பினால் இதற்கேற்றவாறு வாக்குச் சீட்டில் மாற்றம்செய்யவும்.
3. இவ்வருடம் கடிதஉறைகள் உபயோகிக்கப்படமாட்டாது. நீங்கள் எதற்கு வாக்களித்துள்ளீர்கள் என்பதை ஏனையோர் காணாதவண்ணம் வாக்குச்சீட்டை மடிக்கவும்.
4. வாக்குச்சீட்டை ஓர் தேர்தல் ஊழியரிடம் ஒப்படைக்கவும். இவர் உங்களது வாக்கிகுச்சீட்டில் முத்திரைச்சின்னம் பதிப்பார்.
5. முத்திரைச்சின்னமிடப்பட்ட வாக்குச்சீட்டை நீங்களாகவே வாக்குச்சாவடியுள் இடவேண்டும்.

## நீங்கள் முன்கூட்டி வாக்களிக்க உள்ளீர்களா?

**அகஸ்ட் மாதம் 11ம் திகதி திங்கட்கிழமையிலிருந்து செப்தெம்பர் மாதம் 12ம் திகதி வெள்ளிக்கிழமைவரை** நீங்கள் முற்கூட்டி வாக்களிக்கலாம்.

தபால்கந்தோரில் வாக்களிக்கும் ஏற்பாடு நிறுத்தப்பட்டுவிட்டது. நீங்கள் முற்கூட்டி எங்கே வாக்களிக்கலாம் என்பது நகரசபையால் உங்களிற்கு அறிவிக்கப்படும். சுகயீனம் அல்லது

இயக்கத்திறனற்று இருந்தால் வீட்டில் வாக்களிக்கும் ஏற்பாட்டை நகரசபையிடம் கேட்டுக்கொள்ளலாம்.
நீங்கள் உங்களுக்கு விரும்பிய நகரசபையில் முற்கூட்டி வாக்களிக்கலாம். நகரசபைத் தேர்தலின் பட்சம் உங்களை தேர்வுப்பட்டியலில் கொண்டுள்ள நகரசபையை அல்லது மாவட்டசபையை விட வேறு ஓர் நகரசபை அல்லது மாவட்டசபையி நீங்கள் முற்கூட்டி வாக்களித்தால் உங்களிற்கு ஓர் வாக்குச்சீட்டு வழங்கப்படும். பதியப்பட்ட அனைத்து கட்சிகளும் இச் சீட்டில் குறிக்கப்பட்டிருக்கும். ஆனால் வேட்பாளர்களின் பெயர்கள் இதில் குறிக்கப்பட்டிருக்கமாட்டாது. நீங்கள் வாக்களிக்கவிரும்பும் கட்சிக்குப் புள்ளியிடவும் அல்லது ஓர் உள்ளூர் பட்டியலின் பெயரை எழுதவும்.

முற்கூட்டி வாக்களிக்கும் பட்சத்தில் நீங்கள் தேர்தல்தினத்தன்று மீண்டும் வாக்களிக்க முடியாது.

## வாக்குச் சீட்டில் எவ்வாறு மாற்றம் செய்வது?

வாக்குச்சீட்டு மூலம் நீங்கள் எந்தக்கட்சிக்கு வாக்களிக்கிறீர்கள் என்பதை முடிவுசெய்யலாம். நீங்கள் வேட்பாளர்களிற்கு வாக்களிக்க விரும்பினால் நீங்கள் வாக்குச்சீட்டில் மாற்றம்செய்யவேண்டும்/ வேட்பாளரிற்கு வாக்கு வழங்கவேண்டும். வேட்பாளர்களை பட்டியலில் இருந்து இனிமேல் நீக்கமுடியாது. தேர்தலில் வேட்பாளர்கள் *தெரிவுசெய்யப்படுவதன்றி நீக்கப்படுவதில்லை*. மாற்றங்களை எவ்வாறு செய்வது என்பது வாக்குச்சீட்டில் குறிக்கப்பட்டுள்ளது. வாக்குச்சீட்டில் மாற்றங்களை ஏற்படுத்தத் தயங்காதீர்கள்! வாக்குச்சீட்டில் தவறுகள் இருந்தாலும் இது கழிக்கப்படமாட்டாது.

### நகராட்சிமன்றத் தேர்தலின்போது நீங்கள்...

- வாக்குச்சீட்டிலுள்ள வேட்பாளர்களுக்கு *வேட்பாளர்வாக்கு* அளிக்கலாம். ஈவ்வாறாயின் நீங்கள் வாக்களிக்கவிரும்பும் வேட்பாளர்களின் பெயரிற்கு அருகில் உள்ள சதுரத்தில் ஓர் அடையாளம் (புள்ளடி, கீறு போன்ற ஏதாவது) இடவும்.

  வேட்பாளர்களின் பெயர் தடித்த எழுத்துக்களால் வாக்குச்சீட்டில் அச்சிடப்பட்டிருந்தால் இவரது கட்சி அல்லது குழு ஏனைய வேட்பாளர்களிற்கு மேலாக இவரிற்கு சலுகைவாக்கு அளிக்கிறது என அர்த்தம். வாக்களிப்பவர்கள் வேட்பாளர்வாக்கு அளிகக்காவிடிலும் இது வேட்பாளர்களிற்குக் கிடைக்கும்.

  வேட்பாளர்கள் தடித்த எழுத்துக்களால் வாக்குச்சீட்டில் அச்சிடப்பட்டிருந்தாலும் இவ்வாறு அச்சிடப்படாவிட்டிருந்தாலும் நீங்கள் வேட்பாளர்வாக்கை அளிக்கலாம்.

- மற்றைய கட்சிகள்/ குழுக்களின் வேட்பாளர்களிற்கு நீங்கள் வேட்பாளர் வாக்கை வழங்கலாம். இவ்வாறு வாக்களிப்பின் இவ் வேட்பாளர்களின் பெயர்களை உங்களது கட்சியின் வாக்குச்சீட்டில் எழுதவும்.

  இவ்வாறு வேறுகட்சி/குழு வேட்பாளரிற்கு நீங்கள் வாக்களிக்கும்பட்சம் உங்கள் வாக்கின் ஒரு பாகம் ஏனைய கட்சி/குழுவிற்கு கிடைக்கிறது என்பதை கவனத்தில் கொள்ளவும். நீங்கள் வாக்களித்த கட்சிக்கு உங்களது வாக்கின் பெறுமதி அதே அளவில் குறைக்கப்படும்.

  இவ்வண்ணம் மற்றைய கட்சிகள்/ குழுக்களிலிருந்து எத்தனை வேட்பாளர்களை எழுதிக்கொள்ளலாம் என்பது உங்களது வாக்குச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

## மாவட்ட ஆட்சிமன்றத் தேர்தலின்போது நீங்கள்...

- வாக்குச்சீட்டிலுள்ள வேட்பாளர்களிற்கு *வேட்பாளர்வாக்கு* அளிக்கலாம். அவ்வாறாயின் நீங்கள் வாக்களிக்கவிரும்பும் வேட்பாளர்களின் பெயரிற்கு அருகில் உள்ள சதுரத்தில் ஓர் அடையாளம் (புள்ளடி, கீறு போன்ற ஏதாவது) இடவும். நீங்கள் விரும்பியஅளவு தொகை வேட்பாளர்களிற்கு இவ்வாறு வேட்பாளர்வாக்கு வழங்கலாம்.

  மற்றைய கட்சிகள்/ குழுக்களிலிருந்து வேட்பாளர்களை எழுதிக்கொள்ளமுடியாது.

**Fylkestingsvalget 2003**
Framifrå Fylke
**Fylkeslista**

☒ Kari Korsnes, 1969
☐ Leif Grutle, 1935
☒ Marit Strøm, 1952
☐ Nina Karlsen, 1976
☐ Terje Guneriussen, 1962
☐ Mary Smith, 1964
☒ Arve Olufsen, 1979
☒ Hans Hansen, 1952
☐ Signe Martinsen, 1954
☐ Olav Jensen, 1981
☐ Sigurd Samuelsen, 1945
☐ Tony Lindquist, 1982

**Kommunestyrevalget 2003**
Dalen kommune
**Bygdelista for Dalen**

☐ **Svein Johansen, 1980**
☒ **Maren Berg, 1952**
☐ **Lars Holm, 1962**
☒ Nadia Kahn, 1970
☐ Stine Hansen, 1955
☐ Inger Østlie, 1974
☒ Eduardo Perez, 1941
☒ Hans Hansen, 1952

Personstemme til kandidater
på andre lister (slengere)
Skriv navnet her:
Anders Ås

**யார் தெரிவுசெய்யப்படுவார்கள்?**
வாக்குச்சீட்டுகளை எண்ணுவதன் மூலம் நகராட்சிமன்ற மற்றும் மாவட்ட ஆழுனர்சபை என்பவற்றில் எத்தனை அங்கத்தவர்களை கட்சி அல்லது குழு பெற்றுள்ளது என்பதை தேர்தல் நிர்வாகக்குழு அறிந்துகொள்ளும். அதன்பின்னர் வேட்பாளர்வாக்குகளை தேர்தல் நிர்வாகக்குழு எண்ணி எந்த வேட்பாளர்கள் அதிக வாக்குகளைக் கொண்டுள்ளார்கள் என்பதை அறிந்துகொள்ளும்.

## இத் தேர்தலில் யார் வாக்குரிமையைக் கொண்டுள்ளார்கள்?

- தேர்தல்வருட முடிவிற்குள் 18 வயதை அடைந்த, ஏதாவது ஓர் காலகட்டத்தில் நோர்வே நாட்டில் வதித்துள்ளார்கள் எனப் பதியப்பட்ட **நோர்வே நாட்டின் பிரஜைகள்.** தேர்தல்தினத்திலன்று இவர்கள் வெளிநாட்டில் வதிப்பதாகப் பதிவுசெய்யப்பட்டிருப்பதால் பாதகமில்லை.

- தேர்தல்வருட முடிவிற்குள் 18 வயதை அடைந்த **ஏனைய வடபிராந்திய தேசப் பிரஜைகள்** 31ம் திகதி மே மாதத்திற்கு முன்னர் நோர்வேநாட்டில் வதிப்பதாகப் பதியப்பட்டிருந்து, இவர்கள் தேர்தல்தினத்தன்று நோர்வேநாட்டில் வதித்திருந்தால் வாக்களிக்கலாம்.

- தேர்தல்தினத்திற்கு முன்னர் 3 வருடங்கள் தொடர்ந்து நோர்வேநாட்டில் வசிப்பதாக ஆள்பதிவுக்காரியாலயத்தில் பதிவைக்கொண்டு அத்தோடு தேர்தல்வருட முடிவிற்குள் 18 வயதை அடையும் **ஏனைய தேசப் பிரஜைகள்.**

வாக்குரிமையுள்ளவர்கள் அனைவரும் வாக்காளர் பட்டியலில் பதியப்பட்டிருக்கவேண்டும். இந்த வருடம் மே மாதம் 31ம் திகதி உங்களது வதிவு நகரசபையாகப் பதியப்பட்ட நகரசபையின் வாக்காளர் பட்டியலில் நீங்கள் பதியப்பட்டிருப்பீர்கள். நீங்கள் இந்தத் திகதிக்குப் பின்னர் இடம்பெயர்ந்திருந்தாலும் இந்த வருடம் மே மாதம் 31ம் திகதி நீங்கள் வதித்ததாகப் பதியப்பட்ட முகவரியே உங்களிற்கு எங்கு வாக்குரிமை உள்ளது என்பதை நிர்ணயிக்கும்.

**வாக்களிக்கச் செல்லும்போது அடையாளஅட்டையை மறந்துவிடாதீர்கள்!**

**இப் புதிய தேர்தல் விதிமுறைகளைப்பற்றி விபரமாக அறியவிரும்பின் உங்களது நகரசபையுடன் தொடர்புகொள்ளவும் அல்லது**
www.valg.no **இல் வாசிக்கவும்.**
**உங்களது நகரசபையின் இன்ரர்னெற் முகவரி அனேகமாக**
www.நகரசபையின்பெயர்.kommune.no

**தேர்தல் வாழ்த்துக்கள்!**

பதிப்பு ஆகஸ்த் மாதம் 2003
வெளிநாட்டவர் அலுவல்கள் ஆணையகத்தின் ஒத்துழைப்புடன்
உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்பட்டது.

வெளியீட்டு இலக்கம்: H-2141 Tamil

இவ் வெளியீட்டை இன்ரர்னெற்றிலும் பெறலாம்:
www.valg.no